Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 10 | 24-05-2003 | சனிக்கிழமை | ஓசை 95

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சி-7864)

# சிறிலங்காவிற்கான கனேடியத் தூதுவர் தளபதி கருணாவைச் சந்தித்துப் பேச்சு!

## கரடியனாறு செயலகத்தில் நிகழ்ந்தது

(மட்டக்களப்பு)

**இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகர் திருமதி பலோரி ரோஞ்ட் அவர்களை விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கருணா அடங்கலான மட்டு.- அம்பாறை மாவட்ட விடு தலைப்புலிகளின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர். இச்சந்திப்பு நேற்றுமாலை விடுதலைப்புலிகளின் கரடியனாறு செயலகத்தில் இடம்பெற்றது.**

கரடியனாறு செயலகத்தில் பிற்பகல் 4.20க்கு ஆரம்பித்த சந்திப்பில், கிழக்கு விசேட சிறப்புத் தளபதி கேணல் கருணா, சிறப்புத்தளபதி ரமேஸ் பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன்,மகளிர் ராணுவத் தளபதி நிலாவினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் விடுதலைப்புலிகள் சிறுவர்களை படையில் சேர்த்தல், வரி அறவிடுதல் தொடர்பாகவும் முஸ்லிம்கள் தொடர்பாகவும் முக்கியமாக அவர் கேட்டறிந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக விடு தலைப்புலிகளின் மட்டு - அம்பாறை

(08ஆம் பக்கம் பார்க்க)



## மட்டக்களப்பில் சிப்பாய் காயம்

மட்டக்களப்பு கொண்டை வெட்டுவான் சிறிலங்கா படை முகாமில் சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி சிப்பாய் மட்டு. போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கொழும்பு தேசிய மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கே.எஸ். பெரேரா (வயது 38) என்ற சிப்பாயே துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தவராவார்.

## தம்பலகாமம் கடவானையில் கடற்படைச் சிப்பாய் காவல்துறையால் கைது!

திருமலை தம்பலகாமத்தில் உள்ள கடவான என்ற இடத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் தமிழீழ காவல்துறையினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கடற்படைச் சிப்பாய் அனுமதியின்றி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்தமையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் என விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் திலக் தெரிவித்துள்ளார்.

## கடற்படைச் சிப்பாய் புலிகளிடம் சரண்!

(யாழ்ப்பாணம்)

யாழ். காரைநகரில் சிறிலங்காக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்றுக் காலை விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளார்.

குளியாப்பிட்டிய கம்புலுவ மொறதெனிய என்ற இடத்தைச் சேர்ந்த எஸ்.பி.தம்மிக்க றொவன் குமார என்ற கடற்படைச் சிப்பாயே சரணடைந்தவராவார்.

தான் காரைநகர் கடற்படை முகாமில் அடித்து துன்புறுத்தப்பட்டதன் காரணத்தாலேயே தப்பி வந்து விடுதலைப்புலிகளிடம் சரணடைந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

சரணடைந்த மேற்படி சிப்பாய் நேற்று முற்பகல் 11 மணியளவில் காரைநகர் அரசியல்துறையினரால் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் கடற்பிரிவுத் தலைவரிடம் பொதுமக்கள் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## புலிகள் அனுப்பிய உதவிப் பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன

### சிறிலங்கா அரசு அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதி மக்களிடம் மிகக்குறுகிய காலத்தில் சேகரிக்கப்பட்டு கொழும்புக்கு விடுதலைப் புலிகளால் அனுப்பிவைக்கப்பட்ட உணவுப்பொருட்கள் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள மக்களுக்கு நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலிகள் இதேவேளை வெள்ளத்தினால்



(08ஆம் பக்கம் பார்க்க)

## டோக்கியோ மாநாடு நடைபெறாவிடின் இலங்கைக்கு பாரிய நட்டம் ஏற்படும்

### ஜப்பான் அரசு அறிவிப்பு

டோக்கியோ உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறாது விட்டால் யுத்தத்தினால் நீண்டகாலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாரிய நட்டம் ஏற்படும் என்று ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது. அதனால் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிலவும் கருத்து முரண்பாடுகளுக்கு கூடிய விரைவில் தீர்வு காண முயற்சிக்குமாறு விடுதலைப்புலிகளுடன் ஜப்பான் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே முடிவுகள்எட்டப்படாமல்

(08ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபை தொடர்பான புலிகளின் யோசனை கிடைக்கவில்லை

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பது குறித்து விடுதலைப்புலிகளின் யோசனை அரசாங்கத்துக்கு உத்தியோகபூர்வமாக இன்னமும் கிடைக்கவில்லை என்று சிறிலங்காவின் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளதாக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைப் பேச்சுக்கு அழைத்துவர ஜப்பான், நோர்வேயிடம் சிறில.கோரல்

முட்டுக்கட்டைநிலையை நீக்கி புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்துவர வேண்டும்என நோர்வேயையும் ஜப்பானையும் சிறிலங்கா அரசாங்கம் கேட்டுள்ளது.

இரண்டு நாடுகளும் சமாதான நடவடிக்கைகளை மீண்டும் சரியான தடத்திற்கு கொண்டு வர இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என சிறிலங்கா அரசாங்கம் மேலும் கேட்டுள்ளது.

## 2அமைச்சுகளை வழங்கவேண்டும் கூட்டுச்சேர ஜே.வி.பி. நிபந்தனை

பொ.ஐ.மு.வுடன் இணைந்து கொண்டு புதிய அரசாங்கம் அமைப்பதாயின் இரண்டு அமைச்சுக்களை தமக்கு வழங்கவேண்டும். என ஜே.வி.பி.கேட்டுள்ளது. ஊடகத் துறை, விவசாயம் ஆகிய இரு அமைச்சுக்களையுமே ஜே.வி.பி. கோருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி.யும் பொ.ஐ.மு. வும் தேர்தல் கூட்டொன்றை அமைக்க முயன்று வருகின்றமை தெரிந்ததே.

## புலிகளின் யோசனையை நிறைவேற்ற அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

### வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் த.தே.கூ. வலியுறுத்து

(கொழும்பு)

விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனையை நிறைவேற்ற சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு ராஜதந்திரிகளை வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், என்.ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கொண்ட குழுவே வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்து வருகின்றது.

அதன் அடிப்படையில் பிரித்தானிய தூதுவரைச் சந்தித்த தமிழ்த்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை,பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி),கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும்பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3256)

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

பதிய (BRAND NEW) கீறோ கொண்டா ஸ்ரீட் சிமாட் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்பவர் பெயரில் பதிவுப் பொத்தகம் செய்து தரப்படும். தொடர்புக்கு ஞா.சிவராசா (வ.வேலுப்பிள்ளை) 2ஆம் வட்டாரம், கோம்பாவில்,புதுக்குடியிருப்பு. (3219)

### தேவை

வயோதிப மாதுவைப் பராமரிக்க பணிப்பெண் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். விபரங்கட்கு தீன்சுவையகம் - கண்டி வீதி, மாங்குளம். (சி-7872)

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள YAMAHA NEWS MATE 50 மோட்டார் சைக்கிள் (நீல நிறம்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: தங்கமாளிகை, ஈழநாதம் பணிமனை அருகாமை, யாழ். சாலை, கிளிநொச்சி. (3280)


## வெற்றி பெற்றனர்

(முள்ளியவளை)

கடந்த 08ஆம் திகதி நடைபெற்ற உலக செஞ்சிலுவை தினம் தொடர்பான போட்டியில் முள்ளியவளை கலைமகள் வித்தியாலய மாணவர்களான த.நிதர்சன் முதலாம் இடத்தையும் இ.றௌசி இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (ஆ)

# மண்டபம் அகதி முகாமிலுள்ள ஈழ அகதிகளை நேரில் பார்வையிட ஐ.நா.விற்கு அனுமதி மறுப்பு

நாடு திரும்ப விண்ணப்பித்திருந்த ஈழத் தமிழ் அகதிகளை, மண்டப அகதி முகாமிற்குள் சென்று சந்திக்க ஐ.நா.வின் இலங்கை அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் கீதா கல்யாண் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

தாயகம் திரும்புவதற்காக அகதிகளுக்கான ஐ.நா. அபிவிருத்தி அமைப்பிடம் உதவி கேட்டு விண்ணப்பித்திருந்த அகதிகளிடம் ஐ.நா.வின் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் முகாமினுள் சென்று விசாரணை மேற்கொள்ள அனுமதிக்கப்படாமையினால் முகாமிலுள்ள தனித்துணை ஆட்சியர் அகதிகள் புனர்வாழ்வு அலுவலகத்திற்கு சம்பந்தப்பட்ட அகதிகள் அழைக்கப்பட்டனர்.

விண்ணப்பித்தவர்களின் பெரும்பான்மையோருக்கு அனுமதி வழங்கப்பட்டு விட்டது. இதனை கடந்த வாரம் மண்டபம் அகதிகள் முகாமைப் பார்வையிட வந்த முக்கிய உள்விவகாரத்துறை சிறப்புச் செயலர் ஆர்.கே.சர்மா கூறியுள்ளார்.

தாயகம் திரும்ப ஐ.நா.வின் உதவிகேட்டு 9 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் விண்ணப்பித்திருந்தனர். இருப்பினும் 4 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் மட்டுமே குறித்த அதிகாரியை அகதிகளைச் சந்திக்க வருகைதந்திருந்தனர்.

# கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம் விபத்தில் பலியானவரின் குடும்பத்துக்கு உதவி

முல்லை-பரந்தன் பிரதான வீதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பேருந்து ஈருருளி விபத்தில் பலியான மயில்வாகனபுரத்தைச் சேர்ந்த 19 வயதுடைய சின்னத்தம்பி குகதாசன் என்ற இளைஞனின் குடும்பத்தினருக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக பங்காளி நிறுவனமான கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம் மரணச் செலவிற்குச் தேவையான சிறு தொகைப் பணத்தை வழங்கியுதவியுள்ளது.

அத்துடன் இச்சம்பவத்திறல் படுகாயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த 16 வயதுடைய தர்மலிங்கம் தயாளன் என்ற சிறுவனை சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் கொண்டுசெல்வதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் க.வ.அ.நிறுவனம் மேற்கொண்டது.

பாதிப்புறும் மக்களுக்கான அபிவிருத்தி புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொண்டு வரும் க.வ.அ. நிறுவனம், மக்களின் தேவைகளை அறிந்து விரைந்து செயலாற்றுவதில் முன்னுதாரணமாக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பொது மல கூடமின்மையால் மக்கள் பெரும் சிரமம்

(அலுவலக செய்தியாளர்)

கந்தபுரம் சந்தைப்பகுதியில் பொது மலசலகூடம் எதுவும் இன்றி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பொது மலசலகூடம் இல்லாத நிலைமையில் மக்கள் அருகில் உள்ள வயல் பகுதிகளை நாடுகின்றனர். இதனால் வயல் உரிமையாளர்கள் பெரும் சீற்றமடைந்துள்ளனர்.

கந்தபுரம் சந்தை வளாகத்தினுள் ஏற்கனவே இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் இரண்டு மலசலகூடங்கள் கடந்த காலங்களில் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டன. அவை தற்போது பாவிக்கமுடியாத நிலையை அடைந்துள்ளதுடன் துர்நாற்றமும் வீசுகிறது. இதனால் சந்தையில் வியாபாரம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் கவலையடைந்துள்ளனர்.

இந்த மலசலகூடம் அமைக்கப்பட்டதன் பின்னர் எந்தவித புனரமைப்புப் பணிகளும் செய்யப்படாது உள்ளமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இந்த இடத்தில் இருந்து இந்த மலசலகூடங்களை அகற்றித்தருமாறு பலமுறை சம்பந்தப்பட்டவர்களிடம் கூறியும் அவர்கள் பராமுகத்துடன் இருப்பதாகவும் வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர். (லோ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொருள் சேகரிப்பு

தெற்கில் பெரும் வெள்ளம், மண்சரிவு போன்றவற்றால் வீடுகளையும், சொத்துக்களையும் இழந்தமக்களுக்கு உதவ புதுக்குடியிருப்பு நகர் வலயப்பகுதியில் பொருட்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

இதனை இப்பகுதி வர்த்தக சங்கத்தலைவர், தே.எ.பேரவையின் புதுக்குடியிருப்புக் கோட்டச் செயலர் சண்முகநாதன் ஆகியோர் ஒழுங்குபடுத்தினர்.

பாதிக்கப்பட்டு அல்லற்படும் மக்களுக்காக தைத்த ஆடைகள், பால்மா வகைகள், பிஸ்கட் வகைகள், வேறுபொருட்கள் என்பன வர்த்தக நிலைய உரிமையாளர்கள், பொது நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ளன. (19)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியம் பொறிவெடிகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கண்காட்சியினை நடத்தவுள்ளது.

இக்கண்காட்சி 26,27ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், 28, 29ஆம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் இடம் பெறவுள்ளது.

# விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை

(முள்ளியவளை)

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் இடவசதி இன்மையால் சிறந்த விளையாட்டு மைதானம் அமைக்கப்படாதிருந்ததை கருத்தில் கொண்டு கலைமகள் வித்தியாலய அதிபர் மு.உதயசங்கரின் முயற்சியினால் வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்களினதும் வெளிநாட்டிலுள்ள நலன் விரும்பிகளினதும் நிதி உதவியுடன் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான அரை ஏக்கர் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது இக்காணியையும் பயன்படுத்தி விளையாட்டு மைதானம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# கசிப்பு வைத்திருந்தவருக்கு நீதிமன்று தண்டனை

(அலுவலக செய்தியாளர்)

மன்னார் மாவட்டத்தில் கசிப்பு மற்றும் கோடா போன்றவற்றை வைத்திருந்தவருக்கு மன்னார் மாவட்ட தமிழீழ நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

வட்டக்கண்டலைச் சேர்ந்த நபர் ஒருவர் ஒரு லீற்றர் கசிப்பு மற்றும் 70 லீற்றர் கோடா போன்ற சட்ட விரோத மதுபானப் பொருட்களை வைத்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து மன்னார் மாவட்ட நீதவான் திரு. கி.கோவலன் 3 மாதகால சிறை ஒறுப்பும் 3000 ரூபா குற்றப்பணமும் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கியுள்ளார்.(லோ)

# கண்டாவளை பி.செ. பிரிவில் உலர் உணவு நிவாரணம் மீளாய்வு

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உலர் உணவு நிவாரண மீளாய்வு வேலைகள் கிராமசேவகர் பிரிவுரீதியாக பின்வரும் திகதிகளில் குறிப்பிடப்பட்ட நேரத்தில் நடைபெறவுள்ளதாகவும் இம் மீளாய்வில் பயனாளிகள் தவறாது கலந்து மீளாய்வு செய்யுமாறு கண்டாவளைப் பிரதேச செயலருக்காக நிருவாக உத்தியோகஸ்தர் இரா.பற்பநாதன் அறிவித்துள்ளார்.

மேலும் இம்மீளாய்வுக்கு வருகை தரும் போது தேசிய அடையாள அட்டை,குடும்பஅட்டை பங்கீட்டு அட்டை ஆகிய ஆவணங்களுடன் வருமாறு கேட்டுள்ளார்.

மீளாய்வு நடவடிக்கை கிராம அலுவலர் அலுவலகங்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

புன்னைநீராவி 26 27ஆம் திகதிகளிலும் பிரமந்தனாறு, கண்ணகிநகர் 26ஆம் திகதியும் தருமபுரம் கிழக்கு, தருமபுரம் மேற்கு 27ஆம் திகதியும் கோரக்கன்கட்டு, பரந்தன் 28ஆம் திகதியும் கல்மடுநகர், குமரபுரம், உமையாள்புரம், 29ஆம் திகதிகளிலும் நடைபெறும் (14)

# மிதிவெடி பிரச்சினைகள் பற்றி உடனுதவி கோரலாம்

## ம.நே.க. பிரிவினர் அறிவிப்பு

(அலுவலக செய்தியார்)

வன்னிப் பகுதிகளில் மக்கள் வேகமாக மீளக்குடியமரத் தொடங்கியுள்ளதால் தத்தம் இடங்களில் உள்ள மிதிவெடி பிரச்சினைகள் பற்றி உடன் உதவி தேவைப்படின் அதனைச் செயற்படுத்துவதற்கு வசதியாக அவசர மிதிவெடி அகற்றல் உதவி விண்ணப்பங்களை ம.நே. கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தயாரித்துள்ளனர்.

இவ்விண்ணப்பங்களை வெண்புறா தொடர்பகங்கள் ம.நே.க.அ. பிரிவு செயலகங்கள், த.பு.கழக செயலகங்கள் என்பனவற்றில் பெற்றுக்கொள்ளலாம். இவ்விண்ணப்பங்களை நிரப்பி அனுப்புபவர் ஓர் தனிநபராகக்கூட இருக்கலாம். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதும் ம.நே.க.அ. பிரிவினரால் அப்பகுதிக்கு விரைந்து துரித பணிகள் மேற்கொள்ளப்படும் என த.பு.கழக 'செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சோ)

# கட்டாக்காலி கால்நடைகளால் நெற்பயிர்கள் அழிவு

(அலுவலக செய்தியாளர்)

கண்டாவளைக் கிராமத்தில் தற்போது விதைக்கப்பட்டு வரும் சிறுபோக நெற்பயிர்களுக்கு கட்டாக்காலி கால்நடைகளால் அழிவு ஏற்பட்டு வருகின்றது. இதனையிட்டு விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சம்பந்தப்பட்டவர்கள் இதுவிடயத்தில் உடன் கவனம் செலுத்திக் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்து நெற்பயிர்களை காப்பாற்றுமாறு விவசாயிகள் கேட்டுள்ளனர்.

கண்டாவளைப் பகுதியில் சிறுபோக நெற்செய்கை ஆரம்பமாவதையடுத்து கண்டாவளைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் 30-04-2003ஆம் திகதி தொடக்கம் கால்நடைக்கட்டுப்பாட்டை மேற்கொள்ளுமாறு கால்நடை உரிமையாளர்களுக்கு அறிவித்திருந்தும் இதுவரையும் கால்நடைகள் கட்டுப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (14)

# அணைக்கட்டில் ஏற்பட்ட அரிப்பினைத் தடுக்க நடவடிக்கை

கடும் காற்றினால் உடையார் கட்டு அணைக்கட்டில் ஏற்படும் அரிப்பினைத் தடுப்பதற்கு த.பொ.மே.நிறுவனத்தின் அனுசரணையுடன் கமக்காரர் அமைப்புக்களும், விவசாயிகளும் இணைந்து கடந்த நான்கு நாட்களாக சிரமதானப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (26)

# நகர சுத்திகரிப்புக்கு ஒத்துழைக்க விசேட ஆணையாளர் வேண்டுகோள்

(அலுவலக செய்தியாளர்)

வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் குப்பை கூழங்களை வீசியெறியாது நகர சுத்திகரிப்பிற்கு ஒத்தாசை நல்கிடும் வண்ணம் கிளி. கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் வேண்டுகை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தனது வேண்டுகையில் குப்பை கூழங்களை வீசி எறியாது ஒன்றுதிரட்டி பரல்களில் இட்டுவைக்கும் பட்சத்தில் நகர சுத்திகரிப்பாளர்களினால் குப்பை கூழங்களை இலகுவாக அப்புறப்படுத்த முடிவதுடன் நகர சுத்திகரிப்பாளர்களினால் துரித சேவையினையும் மேற்கொள்ள முடியும். எனவே கிளி.மாவட்ட வர்த்தகர்கள் இதனைக் கருத்திற்கொண்டு நகர சுத்திகரிப்பிற்கு ஒத்தாசை வழங்கிடும் வண்ணம் வேண்டிக் கொண்டுள்ளார். (சோ)

# விலை அதிகரிப்பு

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதான சந்தையில் மீன், இறால் விலை கடந்த சிலநாட்களாக அதிகரித்துள்ளது.

இதன்படி ஒருகிலோ மீனின் விலை 200 ரூபாவாகவும் ஒரு கிலோ இறாலின் விலை 240 ரூபாவாகவும் விற்பதை காணக் கூடியதாக உள்ளது. இதனால் இவற்றைக் கொள்வனவு செய்யமுடியாது மக்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்வதை காணக்கூடியதாகவுள்ளது. (26)


## அறிவித்தல்

கிளி. மாவட்டத்தில் குடி சார் ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ள விரும்பும் (ICTAD) இக்ராட்டில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள், பதிவு செய்யப்படாத ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பொது அமைப்புக்கள் யாவும் வட பிராந்திய நிர்மாணிகள் சங்க கிளிநொச்சி மாவட்டக்கிளையில் தங்களை எதிர்வரும் 05.06.2003 இற்கு முன்னர் பதிவு செய்துகொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வட பிராந்திய நிர்மாணிகள் சங்கம்,**
**கண்டி வீதி (பழைய வைத்தியசாலை முன்பாக)**
**கிளிநொச்சி.**

(3284)

# ஈராக் மீதான 13 வருட பொருளாதாரத் தடை

# ஐ.நாடுகள் பாதுகாப்புச் சபையால் நீக்கம்

(பாக்தாத்)

**ஈராக்கிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் அமைப்பு கடந்த 13 வருடங்களாக விதித்திருந்த பொருளாதாரத் தடை நேற்று முன்தினமிரவுடன் நீக்கப்பட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புச் சபையில் இடம் பெற்ற வாக்கெடுப்பின் போது தடைநீக்கத்திற்கு ஆதரவாக 14 வாக்குகள் கிடைத்துள்ளன. 15 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கூட்டத்தில் சிரியாவைத் தவிர ஏனைய 14 நாடுகள் கலந்து கொண்டன. அவ் நாடுகள் அமெரிக்கா கொண்டுவந்த பொருளாதாரத் தடை நீக்கத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன. அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு இது மேலும் சக்தியைக் கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவ் வெற்றி அமெரிக்காவிற்கும், பிரிட்டனுக்கும் எதிர்காலத்தில் பல வேறான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஈராக்கை நிர்வகிப்பதில் அமெரிக்காவும், பிரிட்டனும் முக்கிய மானவர்களாகியுள்ளனர். ஈராக்கின் எண்ணெய்த் துறையிலும் அபிவிருத்தி நடவடிக்கையிலும், அமெரிக்காவும், பிரிட்டனும் மிகவும் கவனத்துடன் செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



அல்ஜீரியா பௌமர்ட்ஸ் நகரில் குடியிருப்பு ஒன்று நிலநடுக்கத்தால் சிதைந்துள்ள நிலையில் மீட்புப் பணிகளில் ஈடுபடுவோரை அவதானிக்கும் அல்ஜீரிய மக்கள்.



அல்ஜீரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் காயமடைந்த சிறுவனொருவனை இடிபாடுகளிலிருந்து மீட்டெடுக்கும் ஒருவர்.

# சர்வதேச நிதிநிறுவனங்களின் அழுத்தத்திற்கேற்ப பங்களாதேஷில் அமைச்சர்கள் எண்ணிக்கை குறைப்பு

(டாக்கா)

பங்களாதேஷ் பிரதமர் தனது அமைச்சரவையை நேற்று முன்தினமிரவு மாற்றியமைத்துள்ளார்.

அமைச்சர்களாகக் கடமை புரிந்த 07 பேரை புதிய அமைச்சரவையிலிருந்து அவர்நீக்கியுள்ளார். அத்துடன் 60பேர் கொண்ட அமைச்சரவையின் எண்ணிக்கை 53ஆக குறைத்துள்ளார்.

சர்வதேச நிதியம் மற்றும் உதவி வழங்கும் அமைப்புக்களின் வேண்டுகோளிற்கிணங்கவே பிரதமர் இவ் அமைச்சரவை மாற்றத்தை மேற்கொண்டுள்ளார்.

அரசின் செலவுகள் அதிகமாக இருப்பதாகவும், அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச அமைப்புகள் பிரதமரிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இதனைத் தொடர்ந்தே பிரதமர் இவ் நடவடிக்கையை மேற்கொண்டதாக பங்களதேஷின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பேருந்து விபத்தில் சிக்கியது; பெரு நாட்டில் 14 பேர் பலி!

பெருநாட்டில் இடம்பெற்ற வாகன விபத்தில் 14 பேர் பலியானதுடன் 45 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பின்தங்கிய கிராமம் ஒன்றில் இருந்து நகரம் ஒன்றை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் வண்டியே பாதையில் இருந்து விலகிப் பள்ளத்துள் வீழ்ந்துள்ளது.

ஒரு மாதப் பாலகனும், எட்டு வயதுச் சிறுமியும், கர்ப்பிணிப் பெண் ஒருவரும் பலியானவர்களில் அடங்குகின்றனர்.

# கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் பாக்.பேச்சிற்குத் தயாராக உள்ளது

## - இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவிப்பு

(புதுடில்லி)

பாகிஸ்தான் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுவருவதால் , அவர்கள் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகத் தெரிகின்றது என்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

கடந்தவாரம் இரண்டு நாள் பயணமாக உத்தரப்பிரதேசம் தலைநகர் லக்னோவுக்கு சென்றிருந்த பிரதமர் வாஜ்பாய் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் இவ்வாறு கூறியிருப்பதுடன்,

பாகிஸ்தானில் செயற்பட்டு வரும் தீவிரவாத முகாம்களை முற்றிலும் அழிப்பதுடன், எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் ஐ.நா. சபையில் காஷ்மீர் பிரச்சனை எழுப்பப்படாது என்றும், இரு நாட்டுப் பிரச்சினையையும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், கூறியுள்ள அவர்,

மேலும் பாகிஸ்தான் பாதுகாப்புச் சபையில் இப்பிரச்சினையை எழுப்பினால் உலக நாடுகளில் ஆதரவு கிடைகாது என்றும் கூறியுள்ளார்.



மொஸ்கோ மிருகக் காட்சிச்சாலையில் மகுடமணிந்த கொக்குகள் ஒன்றையொன்று பார்த்துக் கொள்கின்றன.

# பாதுகாப்பை அதிகரிக்க அமெரிக்கா உத்தவு!

(வாஷிங்டன்)

சவுதி அரேபியாவிலும் மொறோக்கோவிலும் பாதுகாப்பை அதிகரிக்குமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

மேற்படி இரு நாடுகளிலும் அடுத்தடுத்து குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றதோடு இச்சம்பவங்களில் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

இந்நிலையில் மேற்கொண்டும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடும் என்ற அச்ச நிலை தோன்றியுள்ளது. இதன் வெளிப்பாடாகவே பாதுகாப்பை அதிகரிக்குமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

# இந்தோனேசிய மோதலை நிறுத்த ஐ.நா.பொதுச்செயலர் கோரிக்கை

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் சனாதிபதி மேகவதி சுவர்ணபுத்திரி அங்கு அவசரகாலநிலையைப் பிரகடனப் படுத்தியுள்ளார்.

இந்தோனேசிய படையினருக்கும், அந்நாட்டு அரசை எதிர்த்துப் போராடி வரும் போராளிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்கள் முறிவடைந்துள்ளமையயடுத்து இரு தரப்பினருக்குமிடையே கடும் மோதல்கள் இடம் பெற்று வருகின்றன. 30 பேர் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து சில பகுதிகளில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதேவேளை இரு தரப்பினரும் போரை நிறுத்தி பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் கொபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# பேச்சை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை தொடர்கின்றது

## பாகிஸ்தான் பிரதமர் அறிவிப்பு

இந்திய- பாகிஸ்தானிடையே பேச்சுக்கள் தொடர்வதற்கான நடவடிக்கைகள் தொடர்கின்றன என்று பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி கூறியுள்ளார்.

பலுதுஸ்தானின் தலைநகர் குவாட்டாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இருநாடுகளிற்கிடையிலான பிரச்சினைகளை ஒரே நாளில் தீர்த்துவிட முடியாது . பிரச்சினைகள் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் படிப்படியாகத்தான் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.




சனாதிபதி மாளிகையை அணிவகுத்துச் செல்லும் இந்தோனேசிய பள்ளிச் சிறார்கள் ஜகார்த்தா நகருக் கூடாகச் செல்லும் காட்சி.


# கொங்கோவில் இணக்கப்பாடு

கொங்கோ நாட்டில் 5 வருட காலமாக இடம்பெற்று வருகின்ற உள்ளூர் யுத்தத்தை முடிவிற்குக்கொண்டுவரும் பொருட்டு கூட்டு அரசு ஒன்றை நிறுவ ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டுக் கொங்கோவின் 4 புதிய உதவி சனாதிபதிகளில் ஒருவரான அகிதி இங்கோமாவின் பெயர் கூட்டு அரசிற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது. கொங்கோ சனாதிபதியின் அதிகாரிகளையும் தீவிரவாதக் குழுக்களையும் கொண்ட செயற்குழுவே எதிர்க்கட்சிகளின் பொதுப் பிரதிநிதியாக இங்கோமாவை பிரேரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




ஈராக் யுத்தத்தின் போது அமெரிக்க துருப்புக்கள் முகாமிட்டிருந்த பாடசாலையில் அமெரிக்க - எதிர்ப்பு வாசகத்தை கரும்பலகையில் எழுதும் பாடசாலைச் சிறுவர்கள்.



(01) உலகில் எந்த நாட்டுப் பெண்கள் அதிகமாகக் கணினியைப் பயன்படுத்துகிறார்கள்?
☛ அமெரிக்கா.

(02) ஈரான் எப்போது முதன் முதலாக ஏவுகணையைப் பரீட்சித்துப் பார்த்தது?
☛ 1998இல்

(03) உலகக் கோப்பைக் கிரிக்கெட்டில் அதிகமாக 'கைச்' பிடித்த முதல் வீரர் யார்?
☛ ஸ்டீவ் வாஹ் (ஆஸ்திரேலியா)

(04) இறந்த பின்னர் சிறந்த நடிகருக்கான ஆஸ்கார் விருது கிடைத்த நடிகர் யார்?
☛ பீட்டர் ஃபின்ச்.

(05) பின்புறமாகப் பறக்கும் பறவை எது?
தேன்சிட்டு.

(06) கிரேக்க மொழியின் முதல் எழுத்து என்ன?
☛ ஆல்பா (alfa)

(07) உலகில் மிகப் பெரிய உப்புச் சுரங்கம் எங்கேயுள்ளது?
☛ போலந்திலுள்ள வெலிச்கா ஊரில்.

(08) பறவைகளில் எந்தப் பறவையின் முட்டை மிகவும் சிறியது?
☛ ஹம்மிங் பறவை.

(09) முத்திரைகளின் தந்தை என வர்ணிக்கப்படுகின்றவர் யார்?
☛ ரொலன்ஹீல்.

(10) மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் செயற்கைக்கோள் எது?
☛ ஸ்புட்னிக்-1

(11) இந்தியக் கடற்படையின் பெயர் என்ன?
☛ ராயல் இந்தியக் கடற்படை

(12) சயன்ஸ் (Science) எனும் வார்த்தை எதிலிருந்து உருவானது?
☛ சயின்டியா எனும் லத்தீன் மொழியில் இருந்து.

(13) தலைமுடி ஏற்றுமதியில் முன்னணி நாடு எது?
☛ சீனா

(14) நீதிபதிகள் பலர் சேர்ந்த தொகுதி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
☛ பெஞ்ச்

(15) மகாவம்சத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
☛ ஜோர்ஜ் டேர்ஸ்

(16) தானியத்தை மிகையாக உற்பத்தி செய்யும் நாடுகள் எவை?
☛ அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான்.

(17) உலகில் அதிகமாக விற்பனையாகும் பத்திரிகை எது?
☛ ஆஷிஷிம்பன் பத்திரிகை (ஜப்பான்)

(18) மழைத்துளியின் விட்டம் எவ்வளவு என விஞ்ஞானம் கூறுகின்றது?
☛ அண்ணளவாக 06 மி.மீற்றர்.

(19) ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு எது?
☛ காளைச் சண்டை

(20) தரையில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் கடல் வாழ் உயிரினம் எது?
☛ ஆமை.

(21) ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு எப்போது நடைபெறவுள்ளது?
☛ யூன் மாதம் 09ஆம் 10ஆம் திகதிகளில்.

(22) தாய்லாந்தின் தலை நகரம் எது?
☛ பாங்கொக்.

(23) ஜப்பான் நாட்டின் மொத்த பரப்பளவு எத்தனை சதுர கிலோமீற்றர்?
☛ 37800 சதுரகிலோ மீற்றர்

(24) அ) உலகின் மிகப்பழமையான குடியரசு நாடும் (கி.மு. 300 களிலிருந்து சுதந்திரமாக இருந்து வரும்) உலகில் மிகச் சிறிய நாடுகளில் ஒன்றான ஐரோப்பிய நாடு எது?
☛ சான்மரினோ

ஆ) இதன் பரப்பளவு எத்தனை சதுர கிலோமீற்றர்?
☛ 61 ச.கி. மீற்றர்.

# பன்றிக் குட்டிகளுக்கு பால் கொடுக்கும் புலி



பன்றிக் குட்டிகளுக்குப் பால்கொடுக்கின்றது இந்தப் புலி. பன்றிகளுடன் ஒரே கூண்டில் கடந்த ஆறு வருடங்களாக வாழ்ந்து வருகிறது. இவ்வரிய நிகழ்வு தாய்லாந்திலுள்ள சிறிராக மிருகக்காட்சிச் சாலையில் நடைபெறுகிறது.

# உடலுறுப்புகளைக் கண்ணாடி போல காட்டும் அதிநவீன எக்ஸ்ரே கருவி

உடலுறுப்புகளைக் கண்ணாடி போலக்காட்டும் அதிநவீன எக்ஸ்ரே கருவியை இப்போது அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். உடல்நலக் குறைவு என்றால் டாக்டரிடம் செல்கின்றோம். நோய் என்ன? என்பதைக் கண்டுபிடிக்க எக்ஸ்ரே எடுக்குமாறு டாக்டர்கள் கூறுகின்றனர். இந்த எக்ஸ்ரேப் படத்தைப் பார்த்து அறுவைச் சிகிச்சை செய்கின்றனர். உடல் உறுப்புக்களைக் கண்ணாடி போல்க் காட்டும் அதிநவீன எக்ஸ்ரேக் கருவியை இப்போது அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அந்தக் கருவியை நோயாளியின் உடலில் வைத்தால் உள்ளுறுப்புக்களைக் கண்ணாடி போலக் காண்பிக்கும். டாக்டர்கள் அந்தக் கருவியில் பார்த்தபடியே அறுவைச் சிகிச்சை செய்யலாம். மூளை அறுவைச் சிகிச்சை செய்ய அது பெரிதும் உதவியாக இருக்கும் என்கிறார்கள்.

# தண்ணீரிலிருந்து பாலை வேறாக்க அன்னப் பறவையால் முடியுமா?



அன்னப் பறவைகள் பாலையும் தண்ணீரையும் கலந்து வைக்கும் போது, தண்ணீரைப் பிரித்து விட்டு, பாலை மட்டுமே பருகும் என்று கூறுவது உண்மை யல்ல என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

அன்னப் பறவைகளின் எந்த வகையினமுமே இவ்வாறு பாலையும், தண்ணீரையும் பிரித்துப் பருகும் தன்மை கொண்டவையல்ல என்றும் மனிதனின் ஆற்றல்களை அதிகரிக்க இவ்வாறு கூறப்பட்டிருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

# 3,000 தேள்களுடன் இருந்து பெண் சாதனை

தாய்லாந்து நாட்டில் கின்னஸ் சாதனை வரிசையில் இடம்பெறும் நோக்கத்துடன் 3,000 தேள்களுடன் இருந்து பெண் சாதனை படைத்துள்ளார். தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர் காஞ்சனா கெட்கி யூவ் 30 வயதுப் பெண் 3,000 தேள்களுடன் 32 நாட்கள் இருந்து, சாதனை புரியும் முயற்சியை 21.9.2002 அன்று தொடங்கினார். அந்த நிகழ்ச்சி பாங்கொக் அருகில் பட்டயா என்ற இடத்திலுள்ள "பிலீவ் இட் ஓர் நொட்" அருங் காட்சியகத்தில் நடைபெற்றது. கின்னஸ் சாதனையாளர் வரிசையில் இடம்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் அந்த நிகழ்ச்சியை நடத்திய காஞ்சனா, தேள்களைக் கையில் எடுத்து முத்தம் கொடுக்கும் காட்சியைக் கண்டு மக்கள் ஆச்சரியப்பட்டனர். (சசி)

# குழந்தை இறந்தால் தாய்கக ஆயுள் குறைவு!

டென்மார்க்கிலுள்ள ஆராஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜோர்ன் ஆல்சன் குழந்தையைச் சாவு கொடுத்த 21,000 பெண்களின் வாழ்க்கையையும், குழந்தையைப் பறிகொடுக்காத 3,00,000 பெண்களின் வாழ்க்கையை ஒப்பிட்டு மேற்கண்ட உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறார். குழந்தையைப் பறிகொடுத்த பெண்கள் குழந்தை இறந்த 4 ஆண்டுக்குப் பின்னர் பிரிவைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அல்லது கவனக்குறைவால் விபத்தில் சிக்கி இறந்து விடுகிறார்கள் என பேராசிரியர் ஆலசன் கூறுகிறார். அது தவிர இந்தப் பெண்கள் இதய நோய் புற்றுநோய் மற்றும் இதர வியாதிகளால் சாக 44 சதவீதம் வாய்ப்பு இருப்பதாக அவர் சொல் கிறார். குழந்தையைப் பறிகொடுத்த தாயின் உடல்நிலையில் நீண்டகாலபாதிப்பு ஏற்படுகிறது. இரத்த அழுத்தம் கூடி மாரடைப்பு ஏற்படுகிறது. அவர்கள் வாழ்கையில் வெறுப்பு ஏற்பட்டு புகைப் பிடித்தல், குடிப்பழக்கம் போன்றவற்றுக்கு அடிமையாகிறார்கள். அந்தப் பெண்களுக்குச் சரியான ஆதரவும் அரவணைப்பும் கிடைக்காவிட்டால் அவர்கள் விரைவில் சாவது உறுதி என்கிறார் ஆல்சன். அதே சமயம் குழந்தையின் பிரிவால் தந்தைக்கு இந்த அளவு பாதிப்பு ஏற்படுவதில்லை என்றும் ஆல்சன் கூறுகிறார்.

# ஆள் நடந்து செல்வதை வைத்து அடையாளம் காணும் கணினி

ஒருவர் பேசுவதை வைத்து அவர் யார்? என்று அடையாளம் கண்டு பிடித்து விடுகிறோம். டெலிபோனில் பேசிப் பழக்கப்பட்டவர்களுக்கு இது நன்கு தெரியும். மறுமுனையில் பேசுபவர் யார்? என்பதை அடையாளம் கண்டுகொள்வார்கள். அது போல நடந்து செல்வதை வைத்து யார்? என்று அடையாளம் கண்டு பிடித்து விடலாம். ஒவ்வொருவர் நடையிலும் ஒரு தோரணை இருக்கும். அதை வைத்து அது யார் என்று சொல்லி விடலாம். சிலரை ஸ்ருடியோவில் நடக்கச் சொல்லி அதைக் கம்பியூட்டரில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அதை வைத்தே நடந்து செல்பவர் யார் எனக் கம்பியூட்டர் அடையாளம் கண்டுபிடித்து விடும் என கம்பியூட்டர் நிபுணர் ஆரோன் போபிக் கூறியுள்ளார்.

# ஜி. எ. எல். வி. – டி2: வடிவமைப்பும், இயக்கமும்!

## வடிவமைப்பு

ஜியோ சின்க்ரோன சாட்டலைட் லாஞ்ச் வெஹிள் என்று அழைக்கப்படும் ஜி.எ .எல்.வி. விண்கலம், புவியை நோக்கிய ஒருங்கிணைந்த சுழற்சிப் பாதையில் செயற்கைக்கோள்களை செலுத்த வடிவமைக்கப்பட்டதாகும். ஜி.எ .எல்.வி.–டி1 எனும் முதல் சோதனை விண்கலம், ஜிசாட்-1 எனும் பரிசோதனை செயற்கைக்கோளுடன் 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்



18 ஆம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளிமையத்தில் இருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. 1,540கி.கி. எடைகொண்ட ஜிசாட்-1 எனும் பரிசோதனை செயற்கைக்கோளை குறைந்தபட்ச புவி சுழற்சிப் பாதையில் (பெரிஜி) ஜி.எ .எல்.வி.-டி1 செலுத்தியது. அதனைத் தொடர்ந்து வடிவமைக்கப்பட்டது தான் ஜி.எ . எல். வி.-டி2 எனும் இரண்டாவது மேம்படுத்தப்பட்ட விண்கலமாகும். இந்த விண்கலம் 1,800 கி.கி. எடைகொண்ட ஜிசாட்-2 எனும் இரண்டாவது பரிசோதனை செயற்கைக் கோளை குறைந்தபட்ச புவியை நோக்கிய சுழற்சிப் பாதையில் செலுத்த தீர்மானிக்கப்பட்டது. கூடுதல் எடைகொண்ட செயற்கைக் கோளை செலுத்துவதற்கு ஏற்றவாறு ஜி.எ .எல்.வி.-டி2 வின் வடிவமைப்பில் கீழ்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டது. விண்கலத்தை துவக்கக் கட்டத்தில் செலுத்தும் முக்கிய எந்திரத்திற்கு உயர்ந்த திட எரிபொருள் சேர்க்கப்பட்டது. விண்கலத்தை உந்தித் தள்ளும் துணை எந்திரங்களிலும், இரண்டாவது கட்டத்திலும் அதிக அழுத்தம் கொண்ட திரவ எரிபொருள் நிரப்பப்பட்டது. செயற்கைக்கோளின் கூடுதல் எடைக்கு நிகராக ஒட்டுமொத்த வடிவமைப்பில் எடைகுறைப்பு செய்யப்பட்டது. 49 மீறறர் நீளம் கொண்ட 3 கட்ட இயந்திர அமைப்புடன் 414 டன் எடைகொண்டதாக ஜி.எ .எல்.வி.-டி2 வடிவமைக்கப்பட்டது. விண்கலத்தின் மொத்த உயரத்தில் 20.1 மீறறர் உயரம் கொண்டது முதல் கட்ட இயந்திர வடிவம் ஆகும். சாலிட் புரப்பல்லண்ட் எனும் திட எரிபொருளைக கொண்டு இயங்கும் இந்த இயந்திர வடிவம் 2.8 மீறறர் விட்டம் கொண்டது. எ .-139 டேஜ் என்றழைக்கப்படும் இந்த இயந்திரத்தில் 138 டன் ஹட்ராக்ஸில் டெர்மினேட்டட் பாலி பூட்டாடீன் (எச்.டி.பி.பி.) எனும் திட எரிபொருள் நிரப்பப்படுகிறது. விண்கலத்தை சுமந்து கொண்டு புறப்படும் பொழுது இந்த எந்திரம் 4,736 கிலோ நியூட்டன் உந்து சக்தியை உருவாக்கி 107 விநாடிகள் விண்கலம் பறக்க உதவுகிறது. இந்த முக்கிய எந்திரத்தின் பக்கங்களில் ட்ராப் ஆன் டேஜ (எல்40எச்) என்றழைக்கப்படும் 4 உந்து இயந்திரங்கள் பொருத்தப்படுகின்றன. 19.70 மீறறர் நீளமும், 2.1



மீறறர் விட்டமும் கொண்ட இந்த எந்திரங்கள் ஒவ்வொன்றிலும் 42 டன் ஹைபர்கோலிக் புரப்பல்லண்ட (யு.எச்.25) மற்றும் நைட்ரஜன் டெட்ராக்ஸைட் (சூ2டீ4) எனும் திரவ எரிபொருட்கள் கலவை நிரப்பப்படுகிறது. இந்த எந்திரங்கள் ஒவ்வொன்றும் 765 கிலோ நியூட்டன் உந்து சக்தியை தரவல்லவை. 149 விநாடிகள் விண்கலத்தை உந்தித்தள்ளி பறக்க உதவுகின்றன.

செககண்ட் டேஜ் எனப்படும் இரண்டாவது இயந்திர கட்டத்தின் நீளம் 11.6 மீறறர் ஆகும். 2.8 மீறறர் விட்டத்தைக் கொண்ட இந்த எந்திரத்தில், ட்ராப் ஆன் இயந்திரங்களில் நிரப்பப்பட்டதைப் போன்றே ஹைபர்கோலிக் எரிபொருளும், நைட்டரஜன் டெட்ராக்ஸைடும் கலந்த திரவ எரிபொருள் நிரப்பப்படுகிறது. இந்த இயந்திரம் 804 கிலோ நியூட்டம் உந்துதலை தரக்கூடியது. 136 நொடிகள் விண்கலத்தை இயக்கவல்லதாகும்.

## இயக்கம்!

தேர்ட் டேஜ் என்றழைக்கப்படும் மூன்றாவது இயந்திர கட்டம் க்ரையோஜெனிக் டேஜ் என்றும் அழைக்கப்படுகிறது. ரஷ்யாவில் இருந்து பெறப்பட்ட இந்த க்ரையோஜெனிக் இயந்திரம் 8.7 மீறறர் நீளமும், 2.9 மீறறர் விட்டமும் கொண்டது. இதில் 12.6 டன் திரவ ஹைட்ரஜனும், திரவ ஆக்ஸிஜனும் நிரப்பப்படுகிறது. 73.5 கிலோ நியூட்டர் உந்துதலை அளிக்கவல்ல இந்த எந்திரகட்டம் விண்கலத்தை 705 விநாடிகள் இயக்கவல்லதாகும். இதற்கு மேல் பேலோட் ஃபேரிங் என்றழைக்கப்படும் பகுதி 7.8 மீறறர் நீளமும், 3.4 மீறறர் விட்டமும் கொண்டதாகும். இப்பகுதியில்தான் விண்கலத்தை இயக்கும் மின்னணு கருவிகளும், காற்று மண்டலத்தில் விண்கலம் செல்லும்போது அதனை இயக்கும் கருவிகளும் இயங்குகின்றன. விண்கலம் பூமியில் இருந்து 115 கி.மீ. உயரத்தை எட்டிய பின்னர் இப்பகுதி கழன்றுகொண்டுவிடும். இந்த மூன்று கட்ட இயந்திர பகுதிகளையும் இணைக்கும் இடங்களில் விண்கலத்தின் போக்கை நிர்ணயித்து கட்டுப்படுத்தும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. க்ரையோஜெனிக் பகுதியின் மீது உள்ள விண்கலத்தின் கருவிகள் பகுதியில் விண்கலத்தை இயக்கும் வழிகாட்டி கருவிகளும் கட்டுப்பாட்டு கருவிகளும், டெலிமெட்ரி, டெலிகமாண்ட் அமைப்புக்களும் நிறுவப்பட்டுள் ளன. செயற்கைக்கோளை தாங்கியுள்ள முன் பகுதி விண்கலத்துடன் மெர்மேன் கிளாம்ப் - பேண்ட் ஜாய்ண்ட் எனும் இணைப்பின் மூலம் சேர்க்கப்பட்டுள்ளது. பிரிங் மெக்கானிஸம் எனும் இயக்கத்தின் வாயிலாக இயங்கும் இப்பகுதி விண்கலம் ஒரு குறிப்பிட்ட வேகத்தை எட்டியவுடன் (நொடிக்கு 9.7 கி.மீ. வேகம் - சப்ரேஷன் வெலாசிட்டி) தானாகவே இயங்கி செயற்கைக் கோளை விண்கலத்தில் இருந்து பிரித்து சுழற்சிப் பாதையில் தள்ளிவிடும்.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண் மையத்தில் இருந்து 104 டிகிரி சாய்வாக ஏவப்படும் ஜி.எ .எல்.வி.-டி2 விண்கலம் 997 நிமிட நேர பயணத்திற்குப் பிறகு ஜிசாட்-2 செயற்கைக்கோளை சுழற்சிப் பாதையில் செலுத்தவேண்டும் என்பது அதன் இயக்க திட்டமாகும். விண்கலத்தின் முக்கிய பகுதியைச் சுற்றி கட்டப்பட்டுள்ள திரவ எரிபொருளால் இயங்கும் 4 ட்ராப் ஆன் அமைப்புகளும் முதலில் பற்ற வைக்கப்படுகின்றன. 4.8 விநாடிகள் அவை எரியும் பொழுது எதிர்பார்க்கப்பட்ட உந்து சக்தி கிடைப்பது உறுதியானவுடன், திட எரிபொருளால் எரியும் எ 139 எனும் முக்கிய இயந்திரம் பற்றவைக்கப்படுகிறது. எ 139 இயந்திரப் பகுதி 107 விநாடிகள் எரியவேண்டும். அதோடு இணைக்கப்பட்டுள்ள எல்40எச் எனும் ட்ராப் ஆன் அமைப்புகள் 149 விநாடிகள் எரியவேண்டும். அதற்குள் விண்கலம் 69 கி.மீ. உயரத்தை எட்டவேண்டும். ஜி.எ .எல்.வி.-டி2 விண்கலம் திட்டமிட்டபடி இந்த உயரத்தை எட்டியது! திரவ எரிபொருளால் இயங்கும் இரண்டாவது கட்டம், முதற்கட்டம் விண்கலத்தில் இருந்து கழன்று செல்வதற்கு 1.6 விநாடிகள் முன்னதாக பற்றிக்கொள்ளும். இப்பகுதி 136 விநாடிகள் விண்கலத்தை இயக்கவேண்டும். 78 விநாடிகளுக்குப் பிறகு பேலோட் ஃபேரிங் எனப்படும் முன்பகுதி, விண்கலம் 115 கி.மீ. உயரத்தை எட்டியவுடன் கழன்று சென்றுவிட வேண்டும். விண்கலம் 290 விநாடிகள் - கிட்டத்தட்ட 6 நிமிடங்கள் பயணித்து 131 கி.மீ. உயரத்தை எட்டியவுடன் இரண்டாவது கட்டம் பிரிந்து சென்றுவிடும். இப்பகுதியும் திட்டமிட்டபடி 131 கி.மீ. உயரத்தை எட்டியவுடன் விண்கலத்தில் இருந்து பிரிந்தது.

இரண்டாவது கட்டம் பிரிந்தவுடன் க்ரையோஜெனிக் அமைப்பு பற்றிக்கொண்டு இயங்கத் துவங்கியது. 705 நிமிடங்கள் இயங்கி விண்கலத்தை அடுத்த 50 கி.மீ. உயரட்திற்கு இப்பகுதி செலுத்தவேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தை அதிகரிக்கத் துவங்கி 180 கி.மீ. உயரத்தை எட்டிய பொழுது விண்கலத்தின் வேகம் செயற்கைக் கோள் பிரிவதற்கு உகந்த நொடிக்கு 9.7 கி.மீ. வேகத்தை எட்டியது. செயற்கைக் கோள் விண் கலத்தில் இருந்து பிரிந்து குறைந்தபட்ச புவி சுழற்சிப் பாதையில் சுழலத தொடங்கியது!

## ஜிசாட்-2 தகவல் தொடர்பு பரிசோதனை செயற்கைக்கோள்!



புவியை சுற்றி வரும் குறைந்த பட்ச சுழற்சிப் பாதையில் - 180 கி.மீ. உயரத்தில் செலுத்தப்பட்ட ஜிசாட்-2செயற்கைக் கோள், அதில் அமைக்கப்பட்டுள்ள 440 நியூட்டன் லிக்விட் அப்போஜி மோட்டார் (டுஹஆ) பதினாறு 22 நியூட்டன் ரியாக்ஷன் கண்ட்ரோல் திரடர் ஆகியவற்றால் இயக்கப்பட்டு அதிகபட்ச புவிமைய ஒருங்கிணைந்த சுழற்சிப் பாதையான 36 ஆயிரம் கிலோ மீறறர் உயரத்திற்கு தள்ளப்பட்டு, இந்தியாவை நோக்கிய தீர்க்காம்ச ரேகை 48 டிகிரி கிழக்கு கோணத்தில் நிலைநிறுத்தப்படும். பெரிஜியில் இருந்து அப்போஜிக்கு இயக்க 480 கி.கி. மோனோ மீத்தைல் ஹைட் ராஸைன் மற்றும் ஆடீசூ-3 எனும் எரிபொருள் கொண்டு ஜிசாட் டில் உள்ள நியூட்டன் மோட்டார்கள் இயக்கப்படுகின்றன. ஜிசாட்-2 செயற்கைக்கோள் 9.55 மீறறர் நீளம் கெண்டதாகும். இதில் உள்ள சூரிய கதிரை வாங்கி மின் உற்பத்தி செய்யும் சோலார் திரைகள் 1,380 வாட் மின் சக்தியை தயாரிக்க வல் லவை. அச்சக்தியை சேமிக்க இரண்டு 24 ஹா நிக்கல் கேட்மியம் மின்கலங்கள் உள்ளன. ஜிசாட்-2 செயற்கைக்கோளில் 4 சி-பாண்ட் டிரான் பாண்டர்களும், 2 கூ-பாண்ட் டிரான் பாண்டர் களும், எ -பாண்டில் சமிக்ஞைகளைப பெற்று சி-பாண்டில் அளிக்கும் ஒரு மொபைல் செயற்கைக் கோள் சேவை டிரான் பாண்டரும் உள்ளன.

இவைகள் மட்டுமின்றி, டோட்டல் ரேடியேஷன் டோமானிட்டர் எனும் சூரிய சக்தியை மதிப்பிடும் கருவியும், சர்ஃபேசார்ஜ் மானிட்டர் எனும் செயற்கைக்கோளின் சுற்றுப் புறத்தில் ஏற்படும் மாற்றங்களை அறியும் கருவியும், சோலார் எக் ரே பெக்ட்ரோமீற்றர் எனும் சூரிய கதிர்வீச்சில் இருந்து வரும் சக்தியை ஆராயும் செமிகண்டக்டர் மற்றும் சிண்டிலேஷன் டிடக்டர் கருவியும், கோஹரண்ட் ரேடியோ பீக்கான் எக் பிரிமெண்ட் எனும் ஐயனோ பெரில் ஏற்படும் மாற்றங்களை ஆராயும் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. ஜிசாட்-2 செயற்கைக் கோள் திட்டமிட்டபடி துல்லியமாக இயங்கினால் அதனைத் தொடர்ந்து இன்சாட் வகை செயற்கைக்கோள்களை ஜி.எ .எல். வி. மூலமாக விண்ணில் செலுத்தும் திட்டத்தை இரோ நடைமுறைப்படுத்தும்.

## விஞ்ஞானி ஐன்ஸ்டீன்

ஐன்ஸ்டீன் என்பவர் யார்? அந்த உலகம் புகழும் விஞ்ஞான மேதையா? ஆம், அவரேதான். ஜெர்மனியராகப் பிறந்தவர் விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன். நாஜிகளால் நாடு கடத்தப்பட்டவர். அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்தவர். அமெரிக்காவில் பிரின்ஸ்டன் நகரில் உள்ள ஆராய்ச்சி சாலை அவருக்காக ஒதுக்கப்பட்டது. முதன் முதலாக அந்த ஆராய்ச்சி சாலைக்கு அவரை அழைத்துச் சென்று சுற்றிக் காட்டி அவருக்குத் திருப்தி தானா? ஏதும் வசதி குறைவுகள் உள்ளனவா என்று அமெரிக்க விஞ்ஞானிகள் விசாரித்தார்கள். தயங்கித் தயங்கி மெதுவான குரலில் ஐன்ஸ்டீன் சொன்னார். இங்கு எல்லாம் வசதியாகவே இருக்கின்றது.ஒரே ஒரு குறை என்று இழுத்தார். என்ன என்று சொல்லுங்கள், உடனே ச்ரி செய்யப்படும் என்றனர் அமெரிக்க விஞ்ஞானிகள். அறை ஓரத்தில் இருந்து குப்பைக் கூடையைச் சுட்டிக்காட்டி இது ரொம்பவும் சிறியதாக இருக்கிறதே. கொஞ்சம் பெரிய குப்பைக் கூடை இருந்தால் நல்லது என்றார். திகைத்துப் போய்ப் பெரிய குப்பைக் கூடையா? எதற்கு? என்றார்கள். ஐன்ஸ்டீன் சொன்னார் நான் என்ன மேதாவியா? எல்லா ஆராய்ச்சிகளையும் முதலிலேயே சரியாகச் செய்ய... தப்புத் தப்பாகச் செய்வேன். எழுதி எழுதிப் பார்த்தால் எல்லாம் தப்புத் தப்பாக இருக்கும். உடனே கிழித்து எறிந்து விட்டு மீண்டும் எழுதுவேன்.இந்த முட்டாளுக்கு ஒரு விஷயத்தைச் சரியாகச் செய்ய நிறையச் சந்தர்ப்பங்கள் வேண்டும். தவறுகளைப் புதைக் கக் கொஞ்சம் பெரிய குப்பைக் கூடையும் வேண்டும் என்றார்.

## -உடத்தலவின்ன படுகொலை வழக்கு-

# நீதிமன்றத்தை ஏமாற்றியதற்காக 12 ஆவது பிரதிவாதிக்கெதிராகப் புதிய வழக்கு

(கொழும்பு)

**உடத்தலவின்னவில் பத்துப் பேர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் 12ஆவது பிரதிவாதிக்குச் சிகிச்சை அளித்த கொழும்பு தேசிய வைத்தியசாலை டாக்டரிடம் ரகசியப் பொலிசார் வாக்கு மூலம் ஒன்றைப் பெற்றுள்ளனர்.**

இவ் வழக்கு விசாரணையை மேல் நீதிமன்ற உத்தரவிற்கமையவே டாக்டரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கின் 12ஆவது பிரதிவாதியான மகிந்த திஸாநாயக்க சுகயீனம் என பொய் கூறிக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றமை நீதிமன்றத்தை அவமதித்த செயலாகும் என மேல் நீதிமன்றம் கருதியுள்ளது.

இதன் காரணமாக நீதிமன்றததை அவமதித்தமையின் பெயரில் இச் சந்தேக நபர் மீது வழக்குத் தாக்கல் செய்யுமாறு மேல் நீதி மன்றம் சட்டமா அதிபரைக் கேட்டுள்ளது.

## அதிகாரி நியமனம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சிறுவர் நன்னடத்தைப் பராமரிப்பு அதிகாரியாகச் செல்வி. சத்தியவதனி கந்தசாமி நியமிக்கப் பட்டுள்ளார்.

கடந்த 12 ஆம்திகதி முதல் கரைச்சி பிரதேச செயலகத்தில் மேற்படி கடமையினைப் பொறுப்பேற்றுள்ளார். கடந்த பல வருடகாலமாக கிளி நொச்சிப் பிரதேசத்தில் மேற்படி பதவி வெற்றிடமாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வெள்ளப் பாதிப்பிற்குள்ளான அரச ஊழியருக்கு முற்பணம்

(கொழும்பு)

வெள்ளப்பெருக்கு,மண்சரிவு, சூறாவளி போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு முற்பணக் கொடுப்பனவை வழங்குவதென அரச தீர்மானித்துள்ளது.

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் சேதமடைந்த மாவட்டங்களிலுள்ள பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கும் இம் முற்பணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக அரசு கூறியுள்ளது.

## மிலிந்தவின் அனுமதியுடனே சனாதிபதியுடன் பேசுவோம்

### அரச அ.கூ. தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதி எந்தவித பேச்சுவார்த்தைக்காயினும் எம்மை அழைத்தாலும் எமக்குப் பொறுப்பான அமைச்சர் மிலிந்தமொறகொடவின் அனுமதியின்றி நாம் செல்ல மாட்டோம் என அரச அச்சகக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையைத தம்வசப்படுத்தியுள்ளமையை உறுதி செய்யும் பொருட்டு அங்கு கடமையாற்றும் பணிப்பாளர்களைக் கூட்டிப் பேச்சு நடத்துவது பற்றிச் சனாதிபதி அறிவித்திருந்தார் ஆயினும் அச்சகம் இன்றும் அமைச்சின் கீழேயே செயறபடுவதாகவும் அமைச்சரின் அறிவிப்புக்கள் எதுவுமின்றி எந்த மாற்று நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மக்களின் அபிலாசையைப் புறக்கணிக்கும் அரசியல்வாதிகள் அதிகாரம் பற்றிய சிந்தனையிலேயே செயற்படுகின்றனர்

### -அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார்

(கொழும்பு)

"எமது நாட்டில் முதன் முதலாக இப்போதுதான் நிறைவேற்றதிகாரம் ஓரிடத்திலும் ஆட்சி அதிகாரம் வேறொரு இடத்திலும் இருக்கும் அரசியல் தோன்றியுள்ளது. இது கடந்த சனாதிபதித் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும், மக்களின் தீர்ப்பாகும். அவர்கள் முக்கியமாக இனப்பிரச்சினை, பொருளாதாரம் பற்றிய எண்ணத்தில் தாம் விரும்பிய அரசை அமைத்துள்ளார்கள். அதனைப் புறக்கணித்துவிட்டு தற்போது ஆட்சியதிகாரம் பற்றிய சிந்தனையிலேயே அரசியல் வாதிகள் செயற்படுகின்றனர். இது நாட்டு மக்களின் அபிலாசைகளைப் புறக்கணிப்பதாகும்." இவ்வாறு சிறிலங்காவின் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

மத்துகம என்ற இடத்தில் மக்கள் தொடர்பாடல் நிலையத்தைத் திறநது வைத்து உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது; "வரும் ஜூன் மாதத்தில் டோக்கியோ மாநாட்டின் போது நமது நாட்டிற்கு வரலாற்றில் இல்லாத வகையில் உதவித் தொகையாக பல மில்லியன் ரூபாய்களை நன்கொடையாக அளிக்கப் பல நாடுகள் முன்வந்துள்ளன. வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் ஏனைய மாவட்டங்களிலும் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவே இந்நிதி பயன்படும். சமாதானத்தின் அவசியத்தை மக்கள் புரிந்து கொண்டுள்ள இதே வேளையில் சிதைந்து போன பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் வேளையில் அபிவிருத்தி லொத்தர் சபையை களமாகக் கொண்டு அரசியல் இலாபம் தேட முனைவது மக்களின் எதிர்பார்ப்புக்களைச் சிதறடிக்கும் செயலாகும்'' கடந்த பொதுத் தேர்தலில் பொ.ஐ.மு. அரசிடம் நம்பிக்கை இழந்த மக்கள் ஐ.தே.க. அரசுக்கு வாக்களித்து ஆட்சிபிடம் ஏற்றியுள்ளது. எனினும் மக்களால்த் தூக்கியெறியப்பட்ட கட்சியின் தலைவர் தற்போது லொத்தர் சபை விவகாரத்தைக் காட்டி அரசியல் கொந்தளிப்பை உருவாக்க முயல்கின்றது.

இதனைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வெளிநாட்டு சமூகமும் புத்திஜீவிகளும் மதகுருமாரும் அழுத்தம் கொடுத்துள்ளனர். இனி சனாதிபதியின் நிலை என்னவென்பது எதிர்பார்க்கப் படுகிறது எனக் கூறியுள்ளார்.

## முறிந்து விழும் நிலையில் பாடசாலை மண்டபக்கூரை

(அலுவலக செய்தியாளர்)

ஜெயபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபம் ஒன்று பெரும் சேதமடைந்துள்ளது.

மேற்படி பாடசாலையில் மறைப்புக்கள், தடுப்புச்சுவர்கள் எதுவும் இன்றி மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அத்துடன் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை மண்டபம் ஒன்றின் கூரை இல்லாத நிலையில் முகடு முறிவடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. அருகில் வகுப்புகள் நடைபெறுவதால் மாணவர்கள் பாதிப்படையும் சந்தர்ப்பமும் உள்ளது. (லோ)

## மன்னார் வாசி குத்திக் கொலை

(வவுனியா)

வவுனியா தோணிக்கல்லில் ஆலடி என்னும் இடத்தில் நேற்று முன்தினம் மாலை இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த் தகராறு காரணமாக ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இறந்தவர் மன்னாரைச் சேர்ந்த 58 வயதுடைய ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை

ஆனந்தபுரம் சாத்தாநகர் ஆகிய இரு கிராமங்களிலும், கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி அவர்களின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை தொற்று நோய்கள், மற்றும் நுளம்புகளால் பரவும் நோய்களான டெங்கு மலேரியா போன்ற நோய்கள் பற்றிய ஆய்வுகள் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, வெளிக்கள உத்தியோகத்தர்கள், தொண்டர்களினாலும் பூச்சியியல்ஆய்வுக் குழுவினராலும் மேற்கொள்ளப்பட்டன.

இதில் டெங்கு, மலேரியா தொடர்பான ஆய்வுகள் பூச்சியியல் குழுவினராலும் வீடு வீடாகச் சென்று சகல தொற்று நோய்கள் தொடர்பான ஆய்வுகள் பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்களினாலும் தொண்டர்களினாலும் மேற்கொள்ளப்பட்டதுடன் பூச்சிக் குளிசைகள் வீடுவீடாகக் கொடுக்கப்பட்டதுடன் கட்டுக்கிணறுகளுக்கு குளோரினும் இடப்பட்டது.

மேற்படி கிராமங்களில் உள்ள கடைகள் பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் பரிசோதிக்கப்பட்டு காலாவதியான சகல நுகர்பொருட்களும் அழிக்கப்பட்டதுடன் இனி கடைகளில் அப்படியான பொருட்களை விற்கக் கூடாதெனவும் அறிவுறுத்தப்பட்டது.

இதேவேளை, கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி அவர்களின் அறிவுரைக்கிணங்க இன்று விசுவமடு கடைத்தொகுதிகளில் டெங்கு வைரஸ் நுளம்புக் குடம்பிகள், வன்னியலய பூச்சியியல் ஆய்வுக் குழுவினராலும் , கண்டாவளைச் சுகாதாரப் பரிசோதகர்களினதும் ஒத்துழைப்புடன் கண்டு பிடிக்கப்பட்ட கடைகளில், கடையுரிமையாளர்களினாலேயே அழித்தொழிக்கப்பட்டது. கடை உரிமையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் டெங்கு, வைரஸ் காய்ச்சல்களைப் பரப்பும் நுளம்புகளை இல்லாதொழிக்கும், வருமுன்காக்கும் நடவடிக்கையாக விழிப்புணர்வு சுகாதாரக் கல்வி யூட்டியதுடன் சகல கடைகளுக்கும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

## ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

கண்டி உடுதும்பர என்னுமிடத்தில் இயங்கிவரும் "மினரல் வாட்டர்" தொழிற்சாலையில் நிலக்கீழ் அறையொன்றிலிருந்து சக்தி வாய்ந்த ஜெலிக்னைட்டுகள் விமான எதிர்ப்பு பீரங்கிக் குண்டுகள், நவீன துப்பாக்கிகள் கூரிய கத்திகள், வாள்கள் தொலைநோக்கிகள் என்பவற்றை பொலிசார் கண்டுபிடித்துக் கைப்பற்றியுள்ளனர். இது தொடர்பாக, கோடீஸ்வரர் ஒருவரும் அவரின் மகனும் விசாரணைக்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குண்டுகள் பெட்டிகளில் அடுக்கி வைக்கப் பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.


### சேரன் வாணிபம்

#### பணிநிலை வெற்றிடம்

பணிநிலை : அடிமட்ட உழைப்பு சிற்றூழியர்

தகைமை : அரிசி ஆலைப்பகுதி பணிகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம் : நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு, தங்குமிடம் இலவசம்.

மேற்குறிப்பிடப்பட்ட பணிக்கு தகைமை உடையவர்கள் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரியில் 23.05.2003ஆம் நாள் தொடக்கம் 31.05.2003 ஆம் நாள் வரைக்கும் காலை 09 மணி தொடக்கம் மாலை 04 மணிவரை தொடர்பு கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

குறிப்பு: அரிசி ஆலைப் பணிகளில் பயிற்சி பெற்று பணியாற்ற விரும்புவோர்களது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முழுமையான பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் பணி அமர்த்தம் வழங்கப்படும்.

நிர்வாகம்,
சேரன் பணிமனை,
கண்டி வீதி, கிளிநொச்சி.

(3278)



### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 02 07 1938



விண்ணில் 25 04 2003

**அமரர் செல்லையா சபாபதி(D.A)**

(கைதடி நாவற்குழி)

அன்னாரின் திடீர் பிரிவுச் செய்தி கேட்டு துயர் பகிர்ந்தோர் சூழ இருந்து சாலவும் உதவியோர் யாவர்க்கும் நாம் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (25-05-2003) ஞாயிற்றுக்கிழமை எமது தற்காலிக இல்லமான வவுனிக்குளம் நீர்ப்பாசன விடுதியில் நடைபெறுகின்ற வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்ப்பாசன திணைக்கள விடுதி,
வவுனிக்குளம்,
பாண்டியன்குளம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(3276)



**சிந்தனைக்கு**

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவைபுரியும் பணி. மக்களின் நல்வாழ்விற்கு ஆற்றப்படும் தொண்டு.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 24-05-2003

## அரசியல் யாப்பைத் தாண்டி

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வொன்று காணமுடியுமா? இக்கேள்வியானது காலத்திற்குக் காலம் பலரால் கேட்கப்படுவதுண்டு. ஏனெனில், இன்றைய சிறிலங்கா அரசியல் யாப்பின் பிரகாரம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணப்பட முடியாது என்பதே அவர்களின் கேள்விக்கு அடிப்படையாகும்.

சிறிலங்கா அரசியல் யாப்பானது ஒருபுறம் பௌத்த-சிங்களவர்களையே இந்நாட்டின் முதன்மைக் குடிமக்களாகக் கொள்கின்றது. இது ஏனைய இனத்திரை மதத்தினரை இரண்டாம் தரப்பிரஜை என்ற நிலைக்குள் தள்ளி விடுகின்றது. இலங்கை இனப்பிரச்சினையானது, 1972இல் தற்போதைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்க காலத்தில் கொண்டுவரப்பட்ட புதிய அரசியல் யாப்பின் காரணமாகவே தீவிரமாகியது என்றால் மிகையாகாது. அதாவது இவ் அரசியல் யாப்பானது, இதற்கு முற்பட்ட சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மையினருக்கு அரைகுறையாக இருந்த பாதுகாப்பினை இல்லாது ஒழித்தது. இதன்பின்னர் 1978இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பும் அந்நிலையினையே தொடர்ந்தது.

இந்நிலையில் தான், இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலமான அரசியற் தீர்வொன்று சாத்தியமாகப் போவதில்லை, அதற்கு அரசியல் யாப்பு இடமளிக்கப் போவதில்லை என்ற கருத்து வலுப்படுகின்றது. இக்கருத்தானது நிராகரிக்கத்தக்கதோ அன்றி யதார்த்தத்திற்கு மாறானதோ அல்ல.

சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்த விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு உட்பட்டோ அன்றி ஒன்றையாட்சி முறைக்குட்பட்டோ இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக்காண்பதற்கு பேச்சுவார்த்தை மேசைக்குப் போகவில்லை. சிறிலங்கா அரசும், விடுதலைப்புலிகளும் சம அந்தஸ்தான நிலையில் இருந்து பேச்சுக்களை நடத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதென்ற ரீதியிலேயே பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தனர்.

ஆனால், தற்பொழுது பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டைகள், நெருக்கடிகள் என்பனவற்றிற்கு, அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாதவை அரசியல் யாப்பிற்கு மாறானவை எனக் காரணம் கூறப்படுகின்றது. ஆனால், இது ஒரு ஏற்றுக் கொள்ளத்தக்க வாதமும் அல்ல. நியாயமுமல்ல.

அதாவது, தற்போதைய சிறிலங்கா அரசியல் யாப்பில் மாற்றமோ, திருத்தமோ செய்வதானால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அதற்கான பலம் ஆட்சியதிகாரத்திலுள்ள ஐ.தே. முன்னணி அரசாங்கத்திடம் இல்லை. ஆகையினால் அரசாங்கத்தினால் அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதே அரசாங்கத்தை நியாயப்படுத்த விளைபவர்களின் அபிப்பிராயம் ஆகும்.

ஆனால், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முற்படுபவர்கள் யாராயினும், அது சிறிலங்கா அரசோ அன்றி வெளிநாடுகளோ, அன்றி வெளிநாட்டு நிறுவனங்களோ எவையாயினும் ஒன்றை மனதிற் கொள்ளுதல் வேண்டும். இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலமே அரசியல் தீர்வென்றால் அது அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்டதாகவே அமைய முடியும் என்பதே ஆகும்.

ஏனெனில் இன்று இனப்பிரச்சினை பூதாகரமானதொரு நெருக்கடியாக மாறியமைக்கு இவ் அரசியல் யாப்பானது பாரபட்சமானதாக இருந்தமையே காரணமாகும். இவ் அரசியல் யாப்பு, பௌத்த -சிங்களவரைத் தவிர ஏனைய மக்களை ஓர் சம அந்தஸ்துள்ள, சமஉரிமையுள்ள மக்கள் கூட்டமாகக்கொள்ள வில்லை.

ஆகையினால், சிறிலங்கா அரசாங்கத்தினால் – அதாவது ஆளும் கட்சியினால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முடியுமா? சிறிலங்கா அரசியல் யாப்பு அதற்கு இடமளிக்குமா? என்பதெல்லாம் விடுதலைப்புலிகளின் பிரச்சினை அல்ல. தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற் கொள்வது மட்டுமே புலிகளின் கடமையாகும். அதற்கு அப்பால், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இதனை விடுத்து ஆளும் கட்சிக்கு அரசியல் பலம் போதாது, அரசியல் யாப்பு இடம் அளிக்கமாட்டாது என்பது போன்ற காரணிகளை முன்நிறுத்த முனைவதானது சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பயன் ஏதும் விளைந்து விடப் போவதில்லை என்பதையே வெளிக்காட்டுவதாய் இருக்கும்,

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படுமானால் – அதற்கு யாராக இருந்தாலும் சிறிலங்கா அரசியல் யாப்பிற்கு வெளியே வைத்தயாராக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதுவிட்டால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று சாத்தியமாகமாட்டாது. ஏனெனில். சிறிலங்கா அரசியல் யாப்பே பிரச்சினை என்றாகி இருக்கையில் – அவ் அரசியல் யாப்பிற்குள் நின்று கொண்டு பிரச்சினைக்குத் தீர்வுகாண விழைவது என்பது எவ்வாறு சாத்தியமாகும். எத்தகைய மடமையாகும்.

# குறுகிய இனவாத மனப்போக்கிலிருந்து விலகி அதிகாரத்தைப் பரவலாக்குங்கள்

**- சிறி. நாடாளு. உ.க்கு பெல்ஜிய நாடாளுமன்றத் தலைவர் வேண்டுகோள்**

(புறூசல்ஸ்)

குறுகிய இனவாத மனப்பான்மையிலிருந்து விலகி அதிகாரத்தைப் பகிரும் சமஷ்டி ஆட்சி முறை குறித்து விரைவில் இணக்கத்திற்கு வருமாறு பெல்ஜிய நாடாளுமன்றத் தலைவர் சிறிலங்காவின் நாடாளுமன்றக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். பெல்ஜியத்தின் சமஷ்டி ஆட்சிமுறை குறித்து ஆராய்வதற்கு அங்கு சென்ற சிறிலங்கா நாடாளுமன்றக் குழுவினர் மத்தியில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் இலங்கையின் சமாதான முயற்சி வெற்றி பெறுவதற்கு அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு பெல்ஜியம் தயாராகவிருப்பதாக அவர்கூறியுள்ளதோடு பெல்ஜியம் சமஷ்டிஆட்சி முறையை ஏற்றுக் கொண்டு மக்கள் சமாதானத் துடன் வாழ்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

# அமெ.தூதுவர், சிறிலங்காப் பிரதமரை தமிழ்க் கூட்டமைப்பினர் சந்திப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து தமிழ் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமெரிக்க தூதுவரைச் சந்தித்து விரிவாக விளக்கியுள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கடந்த புதன்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேசியிருந்தனர். இதன் போது கடந்த செவ்வாயன்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்த கூட்டமைப்பினர் அதில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைப் பிரதமரிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் கடிதம் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன் அதிகாரம் உள்ள நிர்வாகக் கட்டமைப்புக் குறித்துள விளக்கியுள்ளதாக ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

# கள்ளவாக்குகளால் ஆட்சிக்கு வந்தவர்களே தற்போதைய ஆட்சியாளர்கள்

**-ஐ.தே.முன்னணி அரசைச் சாடுகிறார் தேரர்**

(கொழும்பு)

"முன்பு இந்நாட்டில் அரசியல் வாதிகள் பொலிஸ் திணைக்களத்தோடு விளையாடியது கிடையாது. ஜே.ஆர் ஆட்சிக்கு வந்த பிறகே இந்த நிலை எற்பட்டது. இதனை மாற்ற வேண்டும் அரசியல் வாதிகள் இதனைக் கண்டு கொள்வதில்லை. கிராமப்புறங்களுக்கு அவர்கள் சேவை செய்ய முன்வருவதில்லை. இவ்வாறு ரம்புக் வெல்ல ஸ்ரீவிபக்கி மல்வத்த மகாநாயக்க தேரர் தன்னைச் சந்திக்க வந்த சுயாதீனப் பொலிஸ் ஆணைக்குழு தலைவரும் சனாதிபதியின் சட்டத்தரணியுமான றஞ்சித் அபயசூரியவிடம் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், மக்களுக்கும் பொலிசாருக்கும் சிறந்த பாதுகாப்பையளிக்க ஆணைக்குழு முன்வர வேண்டும் எனவும் பாதுகாப்பு எனக் கூறிக் கொண்டுத் தவறான வழியில் செயற்படுகின்றவர்களைத் தண்டிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

"சட்டம் எழுத்தில் மட்டுமே இருக்கிறது. செயலில் காணப்படவில்லை. இந்நாட்டில் நேர்மையற்ற வழியில் வாக்குப் பெற்று பதவிக்கு வந்தவர்களே ஆட்சி நடத்துகின்றனர். வாக்களிப்பு நிலையத்துக்கு வந்தவர்கள் துரத்தப்படுகிறார்கள் தற்போதைய தேர்தல் முறையை மாற்றி தொகுதிவாரித் தேர்தல் முறையை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும் என்றார்.

# கெற்பலி சம்பவம் குறித்து ம. உ. ஆணைக்குழுவில் விசாரணை

(வடமராட்சி)

தென்மராட்சியில் இராணுவ முன்னரங்க காவல்நிலைகளை அண்டிய கெற்பலிப்பகுதியில் பொது மக்கள் மீது கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணை நடைபெற்றன.

இச்சம்பவம் தொடர்பாக படைச் சிப்பாய் ஒருவரைக் கைது செய்து இராணுவ நீதிமன்றில் ஒப்படைத்திருப்பதாக அச்சந்திப்பில் கலந்து கொண்ட யாழ். இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார்.

கெற்பலி கிராம மக்கள் மற்றும் படை அதிகாரிகள் கலந்து கொண்ட இச்சந்திப்பில் படையினரால் சேதமாக்கப்பட்டபொது மக்களின் உடைமைகளுக்கு நட்டஈடுகள் வழங்கப்படவேண்டும் என பொதுமக்கள் தரப்பில் விடுக்கப்பட்டபோது, படைத்தரப்பு சேதமாக்கப்பட்ட உடைமைகளுக்கான நட்டஈடுகள் வழங்கப்படுவதற்கு ஒப்புக்கொண்டது.

காலைமுதல் மாலைவரை நடைபெற்ற இந்தக் தொடர்ச்சியான சந்திப்பில் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய படைச்சிப்பாய் மீது இராணுவ நீதிமன்று ஊடாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இனிமேல் இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெறாது பார்த்துக்கொள்வதாகவும் 554 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரிகள் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னிலையில் பொதுமக்களுக்கு உறுதி அளித்தனர்.

இனிவரும் காலங்களில் பொது மக்கள் மீது படையினர் அத்துமீறி தாக்குதல் நடத்தாது இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இக்குழுவின் இணைப்பதிகாரியாக பொதுமக்களில் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இப் பகுதி பொதுமக்கள் மிரட்டப்பட்டாலோ அல்லது தாக்கப்பட்டாலோ உடனடியாக படைத்தலைமைக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் ஊடாக தெரியப்படுத்தி உடனடியாக உரிய நடவடிக்கைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் இச்சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி ஆர்பி ரூபன் சந்திரசேகரன் தெரிவிக்கின்றார். (27)

# இலங்கையின் நலனில் இந்.அக்கறை கொண்டுள்ளது

**-இந்தியத் தூதுவர் தெரிவிப்பு**

(கொழும்பு)

இலங்கையின் நலனில் இந்தியா பெரிதும் அக்கறை கொண்டுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம்சிங் சிறிலங்கா பிரதமரிடம் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கான சிறிலங்காத் தூதுவரை சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் கடந்த புதன் கிழமை சந்தித்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது தொடர்பாகவும் மற்றும் உதவிகள் பற்றியும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

## —வடக்குக்கிழக்கு மாகாண— மென்பந்தாட்ட வலைப்பந்தாட்டப் போட்டி

வடக்குக் கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சின் மென்பந்தாட்ட, வலைப்பந்தாட்டப் போட்டி தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் வித்தியானந்தாக் கல்லூரி பின்பகுதி மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

வட-கிழக்கு மாகாணத்திற்குட்பட்ட 8 மாவட்டங்களையும் உள்ளடக்கி இப்போட்டி நடைபெறவுள்ளது. போட்டி போட்டிகள் காலை 8 மணி முதல் மாலை வரையும் நடைபெறும்.

# உலக சூழல்தினத்தை முன்னிட்டு
# பல்வேறு நிகழ்வுகளை நடத்தத் தீர்மானம்

(அலுவலக செய்தியாளர்)
உலக சூழல்தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 29ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரையும் தமிழர் தாயகப்பகுதி எங்கும் பல்வேறு நிகழ்வுகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வனவளப்பாது காப்புப்பிரிவு, உள்ளூர் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெகுசன அமைப்புக்களுடன் இணைந்தே இந்தச் சூழல் பாது காப்புத் தினம் அனுஷ்டிப்பதற்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நேற்றும் நேற்று முன்தினமும்கிளிநொச்சியில் இடம் பெற்றுள்ளது. இக்கலந்துரையாடலில் சூழல் தினத்தை ஒட்டிய செயற்பாடுகளை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

சூழல் தினம் தொடர்பாக பாடசாலை ரீதியாக கட்டுரைப் போட்டிகள் மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், யூன்மாத முதலாம் வாரத்தில் யாழ் பல்கலைக்கழகத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் கிழக்கு மாகாணத்திலும் சூழல் பாதுகாப்புத் தொடர்பான மூன்று ஆய்வரங்குகளை மேற்கொள்ளுதல்,


உள்ளூர் சர்வதேச நிறுவனங்கள் ஊடாக சூழல்பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு பிரசுரங்களை வெளியிடுதல், பாடசாலைகள் தோறும் சூழல்பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்குகளை நடத்துவது டன் மரநடுகைகளையும் மேற்கொள்ளுதல், சூழல் பாதுகாப்புத் தொடர்பாக ஊடகங்களில் ஆக்கங்களை வெளியிடுதல் மற்றும் தமிழர் தாயகப்பகுதிகளில் உள்ள கழிவுப் பொருட்களை முற்றாக அகற்றுவது, அத்துடன் கடந்த கால யுத்தத்தினால் அழிக்கப்பட்ட மரங்களுக்கீடாக மரங்களை நாட்டுதல் போன்ற திட்டங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பு தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தலைமையில் இடம் பெற்றது. இச்சந்திப்பில் சிரான் திட்டப்பணிப்பாளர் திரு.செல்வின், அரசியல் துறையைச் சேர்ந்த சஞ்சே, அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, விடுதலைப் புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜெய் மகேஸ்வரன், பொருண்மிய மதியுரைஞர் தாஸ், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சண்குமார் ஜேர்மனைச் சேர்ந்த றோபேட் மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். (லோ)

# அல்ஜீரியாவில் இறந்தோர் 1500வரையில் அதிகரிப்பு!

(அல்ஜீரியா)
அல்ஜீரியாவில் நிகழ்ந்த நில நடுக்கத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை இது வரை 1500ஐ நெருங்கிக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இந் நிலையில் கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து பலர் உயிருடன் மீட்பு பணியாளர்களால் மீட்கப்பட்டுள்ளனர். இதில் 19மாதக் குழந்தை ஒன்றும் அடங்கும்.

பூகம்பகத்தில் உருக்குலைந்த கட்டடங்களின் இடிபாடுகளை தங்களது வெறும் கையால் மக்கள் தோண்டிவருகின்றனர்.பூகம்பத்தின் பாதிப்பு அதிகரித்துவரும் நிலையில் அண்மையில் கட்டப்பட்ட கட்டடங்கள் தான் இடிந் திருக் கின்றன.என்று பல அல்ஜீரிய மக்கள் ஆத்திரத்துடன் முறையிட்டுள்ளனர்.



# சிப்பாய்களுக்கான உணவுப் பொருட்கள்
# தனியார் வியாபாரிகளுக்கு விற்பனை!
## - துன்னாலைப் பகுதியில் சம்பவம்

(வடமராட்சி)
தென்மராட்சிப் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா படைத்தளம் ஒன்றில் நிலைகொண்டுள்ள சிப்பாய்களுக்கென எடுத்து வரப்படும் உணவுப் பொருட்களை தனியார் வர்த்தகர்கள் சிலருக்கு விற்பனை செய்துவந்த மோசடிச் சம்பவம் ஒன்று சிறிலங்கா ராணுவ பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து பருத்தித்துறை கொடிகாமம்வீதி ஊடாக எடுத்துவரப்படும் உணவுப் பொருட்கள் துன்னாலைப் பகுதியில் வைத்து தனியார் வர்த்தகர்கள் சிலருக்கு கைமாற்றம் செய்யப் பட்டுள்ளது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

தமிழ்ப் பொது மகனான தரகர் ஒருவரின் உதவியுடன் படைச்சிப்பாய்கள் சிலர் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை தொடர்ச்சியாக தென்மராட்சியில் உள்ள வர்த்தகர்களுக்கு விற்று வந்திருப்பதாக ராணுவப் பொலிசார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து மேற்படி தரகர் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அவர் தலைமறைவாகிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பருத்தித்துறை கொடிகாமம் வீதியில் உள்ள பற்றைக் காணி ஒன்றினுள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு அத்தியாவசிய உணவுப்பொருட்கள் தனியார் வர்த்தகர்களின் கைகளில் சேர்வதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தபோது கைப்பற்றப் பட்டதையடுத்து இந்நடவடிக்கை அம்பலமாகியுள்ளது. (27)

## -முக்கோண ஒருநாள் போட்டி -
# பாகிஸ்தானைத் தோற்கடித்து
# நியூசிலாந்து கிண்ணத்தை சுவீகரித்தது

சிறிலங்கா, நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முக்கோண ஒருநாள் போட்டித் தொடரில் நியூசிலாந்து அணி வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது.

நேற்று தம்புள்ளையில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியை நான்கு விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டதன் மூலம் நியூசிலாந்து இவ்வாய்ப்பைப் பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 198 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அதிகபட்சமாக யூனிஸ்கான் ஆட்டம் இழக்காது 70 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 199ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்று ஆடத் தொடங்கிய நியூசிலாந்து 45.2 ஓவரில் விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் அணித் தலைவர் பிளெமிங் 65 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பிளெமிங் தெரிவு செய்யப்பட்ட அதேவேளை தொடரின் சிறப்பாட்டக்காரராக பாகிஸ்தானின் சொஹைப்மாலிக் தெரிவுசெய்யப் பட்டார்.

## "ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புக்கள்" கவிதை நூல் வெளியீட்டுவிழா

(அலுவலக செய்தியாளர்)
கருணாகரனின் கவிதைநூலாகிய "ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புக்கள். நூல் வெளியீட்டுவிழா இன்று நடைபெறவுள்ளது. மாலை 3.30 மணிக்கு புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் வெளியீட்டுவிழா நடைபெறவுள்ளது. (பா)

# இடைக்கால நிர்வாகசபைக்கு
# பொ.ஐ.மு எதிர்ப்பு

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கு பொ.ஐ. முன்னணி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடாத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் பொ.ஐ. முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் அரசியலமைப்புக்கு முரணான வகையில் வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகசபையினை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வழங்க முயன்றால் அதனை பொதுசன ஐக்கிய முன்னணி எதிர்க்கும் என்று சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் பிரச்சினைக்கு தீர்வு முன்வைக்கப்படுவதற்கு முன்னதாக விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும் என்பதே பொ.ஐ.முன்னணியின் நிலைப்பாடு என்று அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுமானால் அது குறித்து பிரதமர் சனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்றும் சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

## புலிகள் அனுப்பிய...

நிவாரணப்பொருட்களை வழங்கியுள்ளமை முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சம்பவம் என அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

புலிகளால் அனுப்பிவைக்கப்பட்ட உலர் உணவுப்பொருட்களின் ஒரு தொகுதியை களுத்துறையில் அவர் பெற்றுக்கொண்டுள்ளார்.

தொடர்ந்து அவர் கூறுகையில் புலிகளின் மனிதாபிமான தன்மைகளை இது எடுத்துக்காட்டுகிறது எனவும், அவர்கள் மீது எதிர்ப்புக்களை தெரிவிப்பவர்கள் தங்களது நிலைப்பாடு சம்பந்தமாக மீளாய்வு செய்யவேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

அரசு மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கைகள் காரணமாக இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது எனவும், தென்பகுதிக்கும், வடபகுதிக்கும் இடையிலான நட்புறவு அபிவிருத்தியடைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்குடன் சர்வதேச நாடுகள் பல உதவ முன்வந்துள்ளன.

வெள்ளத்தாலும், மண்சரிவினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக சுவிஸ்லாந்து 80,000 அமெரிக்க டொலர்களையும் அவுஸ்திரேலியா 65,000 அமெரிக்க டொலர்களையும் சிறிலங்காவுக்கு வழங்கியுள்ளன.

## இடைக்கால...

அதேவேளை விடுதலைப் புலிகளின் இந்தக் கோரிக்கை குறித்து சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐரோப்பிய யூனியன் எச்சந்தர்ப்பத்திலும்
# பக்கச்சார்பாக நடந்துகொள்ளாது
## யாழ்.இல் ஐ.ரோ.யூனியனின் வதிவிடப்பிரதிநிதி வூட்டர்வில்ற்றன்

(வடமராட்சி)
டோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் புலிகளும் கலந்து கொள்ள வேண்டும் என தான்எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான ஐரோப்பிய யூனியனின் வதிவிடப் பிரதிநிதி வூட்டர் வில்ற்றன் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டுக்கான இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று விஜயம் மேற்கொண்ட அவர், யாழ். மாவட்டமனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகளை யாழ். நகரின் கோவில் வீதியில் உள்ள அலுவலகத்தில் சந்தித்து உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

டோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ளஉதவி வழங்கும் மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளவேண்டும் என்று சர்வதேச சமூகம் வலியுறுத்தி வருவதாக கூறிய அவர் ஐரோப்பிய யூனியன் அமைப்பு எச்சந்தர்ப்பத்திலும்,எத்தரப்பிற்கும் ஆதரவாக, பக்கச்சார்பாக செயற்படமாட்டாது என வலியுறுத்தினார்.

அத்துடன் ஐரோப்பிய யூனியன் நாடுகளால் வழங்கப்படுகின்ற நிதியுதவி அந் நாட்டு மக்களின் வரிப்பணத்தில் இருந்தே இலங்கைக்கு உதவியாக வலங்கப்படுவதாகவும் ஆயினும் இந் நிதியைஎத் தரப்பும் துஸ்பிரயோகம் செய்வதை ஐ.ரோப்பிய யூனியன் நாடுகள் ஏற்றுக்கொள்ளமாட்டாது எனத் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சுபரமநாதன், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு14 மாதங்களை கடந்துள்ள போதிலும் குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை மேம்பட்டிருக்கவில்லை என வலியுறுத்தியதுடன் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் கடந்த 13வருடகாலத்துக்கு மேலாக இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்க்கை நடத்துவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதேவேளை நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழகம், யாழ் போதனா வைத்தியசாலை, யாழ் செயலகம் யாழ். மாவட்ட மகளீர் அபிவிருத்தி நிலையம், வடமாகாண கடற்றொழிலாளர்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகிய வற்றிற்கும் வூட்டர் வில்ற்றன் விஜயம் மேற்கொண்டார்.

## சிறிலங்காவிற்கான...

ஊடகப்பேச்சாளர் தெரிவிக்கும் போது

நாம் சிறுவர்களை படையில் சேர்ப்பதென்ற தகவல் உண்மையல்ல என்பதையும் வரி அறவிடுவது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெளிவாக விளக்கிக் கூறியதாகக் கூறினார்.

இதேவேளை கனேடியத்தூதுவர் விடுதலைப்புலிகளைச் சந்திப்பைத் தொடர்ந்து தமிழ் குழுக்களையும் சந்தித்து உரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்பின் போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்ததுடன் முஸ்லிம்களின் விடயத்தில் விடுதலைப்புலிகள் காட்டிவரும் அணுகுமுறை தொடர்பில் கனேடிய உயர்ஸ்தானிகர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

ஐந்து நாட்கள் விஜயம்மேற்கொண்டு கிழக்கு மாகாணம் சென்றுள்ள கனேடியத்தூதுவர் முதல் இருதினங்களாக திருகோணமலைக்குச் சென்றபின் இப்போது மட்டக்களப்புக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டோக்கியோ...

எஞ்சியிருக்கின்ற விடயங்கள் சூழ்நிலையின் அவசரம் கருதி அவசரமாக உடன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று ஜப்பான் கேட்டுள்ளது.

ஜப்பான் அரசு நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் புனரமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சர்வதேச சமூகம் தனது உறுதிப்பாட்டை வெளியிட்டுள்ள நிலையில் டோக்கியோ மாநாட்டுக்கான ஏற்பாடுகள் ஏற்கனவே இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## புலிகளின்...

தேசியக்கூட்டமைப்பினர் விடுதலைப்புலிகளின் கோரிக்கையை நிறைவேற்றி சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

இதேவேளை, அமெரிக்க தூதுவரை கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.